குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

<u>எஸ்.டி.சி.எண். 419/2020</u>

<u>வழக்கு சாட்சி ம.சா.1</u>

ம.சா.1 – முருகராஜ்

நாள் – 02.07.2025.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பழைய நூல் வாங்கி விற்கும் வியபாரம் செய்து வருகிறேன். நான் எத்தனை வருடமாக இந்த தொழில் செய்து வருகிறேன் என்றால் சுமார் 15 வருடமாக செய்து வருகிறேன். நான் பி.எம்.ஆர் டிரேடர்ஸ் என்ற பெயரில் உரிமையாளராக தொழில் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2019 முன்னால் தெரியும். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் நூல வியபாரம் செய்து வருகிறார். எதிரி எங்கு தொழில் செய்து வருகிறார் என்றால் எந்த தொழில் என்று தெரியாது இரண்டாம் தரம் நூல்களை வாங்கி விற்பனை செய்வார். நூல் வாங்கி விற்பதற்கு பதிவேடு பராமரிப்பது இல்லை என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை வருடா வருடம் வணிகவரி மற்றும் வருமான வரி கணக்கில் காண்பிப்பது வழக்கம் என்றால் கணக்கு காட்டி வருகிறேன். 16.05.2019 –ல் எதிரி என்னிடம் அட்வான்ஸ் வாங்கிய தொகையை கணக்கில் காட்டியுள்ளேன் என்றால் காட்டியுள்ளேன். 16.05.2019 –ல் எதிரியிடம் எந்த ஒரு காசோலையையும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான். 19.06.2019 –ல் எதிரி என்னிடம் இந்த வழக்கு காசோலையை கொடுத்தார் என்றால் ஆமாம். இந்த ஒரு மாத கால இடைவெளியில் எதிரியிடம் நூல் பெற்றுக்கொண்ட தொகை கேட்டாரா என்றால் கேட்டார். நூல் விலை வித்தியாசம் என்பதால் பின்னர் கொடுப்பதாக சொன்னார். எனது சட்டஅறிவிப்பில் இதை சொல்லவில்லை என்றால் சரியல்ல. காசோலையை எதிரி என்னிடம் 19.09.2019ம் தேதி வழக்கு காசோலையை எதிரி வசூலுக்கு தாக்கல் செய்ய சொன்னதாக கூறியுள்ள நிலையில் எந்த எந்த தேதியில் எதிரி என்னிடம் வசூலுக்கு தாக்கல் செய்ய கேட்டேன் என்றால் 12.09.2019ம் தேதி கேட்டேன்.

நான்28.09.2019ம்தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு ஆனது எதிரியின் விசாலசத்தில் இல்லை என்று சொல்லிதான் வந்துள்ளது என்றால் ஆமாம். ஆனால் அது சொந்த வீடு ஆகும். அவரது வீட்டிற்கான ஆவணம் எதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு நூல் வியாபாரத்தை தவிர, மாதச்சீட்டு நடத்தி தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை எனது அப்பா நடத்தி வருகிறார். எதிரி எனது அப்பாவிடம் சீட்டு போட்டுள்ளாரா என்றால் இல்லை. எதிரி உங்களிடமும், உங்களது அப்பாவிடம் சீட்டு போட்டு வந்தார். அந்த வகையில் அந்த ஏலச்சீட்டு எடுக்கும்போது செக்யூரிட்டாக காசோலை கொடுப்பது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா 50 ஆயிரம், 1 லட்சம் சீட்டு நடத்துவார். எதிரி என்னிடம் காசோலை நூல் வாங்கியதற்காக கொடுக்கவில்லை என்றும், சீட்டிற்காகத்தான் கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி காசோலையை பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றும், கையெழுத்து மட்டும் தான் போட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்து ஒரு மையிலும், உள்ள வாசகங்கள் மற்றொரு மையிலும் உள்ளது என்றால் சரியல்ல. எதிரிதான் பூர்த்தி செய்தார். எதிரி நஷ்டமடைந்து விட்டதாக நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த நொடிப்பு நிலை மனுவில் எனக்கு சம்மன் வந்ததா என்றால் சரிதான். அந்த மனு திருச்செங்கோடு சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதற்கு முன்பே நான் இந்த வழக்கை தாக்கல் செய்து விட்டேன். எதிரி 13.01.2019 எதிரி வீட்டிலேயே இல்லை என்றும், நீங்கள் சொன்ன தேதியில் பணம் வாங்கிவிட்டு காசோலையை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மீது இதே நீதிமன்றத்தில் 4 வழக்குகள் உள்ளது என்றால் நீதிமன்றத்திற்கு வந்த பின்னிட்டு தெரியும். சண்முகம் என்பவரும் காசோலை வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் நீதிமன்றத்திற்கு வந்த பின்னிட்டு தெரியும். சண்முகம் என்பவரது மனைவி என் தாய்மாமா மகள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரி நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்வதை

தெரிந்து நீங்களும் மற்ற புகார்தார்களும், எதிரி மீது பொய்யான ஜேடனை செய்து காசோலையை தாக்கல் செய்து வழக்காடி வருகிறார் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நொடிப்பு நிலை மனுவினை நான் நடத்தவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கினை நடத்தினால் இந்த வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் அந்த வழக்கை நடத்தாமல் விட்டு விட்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நாளில் எதிரி எந்த ஒரு வியாபாரமும் செய்யவில்லை என்றும், இந்த வழக்கிற்காக ஏற்கனவே சீட்டு கொடுத்த காசோலையை மோசடியாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு வழக்கு காசோலை தொகையை தவிர வேறு எந்த பரிவர்த்தனை உள்ளதா என்றால் இல்லை. எதிரி கொடுத்த காசோலை வங்கியும் (ஆந்திரா வங்கி) நான் வங்கியில் கணக்கு வைத்துள்ள வங்கியும் ஒரே வங்கி தான் என்றால் சரிதான். எதிரி ஏற்கனவே தங்களிடம் வரவு செலவு வைத்து ரூ.3 லட்சம் வங்கியின் மூலம் பரிவர்த்தனை செய்துள்ளார் என்றால் இல்லை. எனது மற்றும் எதிரியின் வங்கி கணக்கை ஒப்பிட்டு பார்த்தால் விவரம் தெரியுமா என்றால் தெரியும் என்றால் சரிதான். எதிரி வியாபார வகையில் வரவேண்டிய பாக்கி தொகை என்னிடம் வருமானவரி கணக்கு மற்றும் வணிக வரி கணக்கு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதனை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எதிரி 13.01.2019 க்கு பின்னிட்டு யாரிடமும் எந்த ஒரு வரவு செலவும் வைத்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

/ Sd /– A. K. Padmapriya
Judicial Magistrate,
Kumarapalayam